**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமைப் பிரசங்கம்**
**13 ஜூலை 2018 / 29 ஷவ்வால் ஹிஜிரி 1439**

# மாறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ، اَلَّذِيْ بَعَثَ مُحَمَّدًا بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللهِ وَسِرَاجًا مُنِيْرًا. أَشْهَدُ اَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ
شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ. اَللَّهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ وَالتَّابِعِيْنَ، صَلاَةً
وَسَلاَمًا دَائِمَيْنِ مُتَلاَزِمَيْنِ إِلَى يَوْمِ الدِّيْنِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ،
إِتَّقُوْا اللهَ، أُوْصِيْ وَنَفْسِيْ وَإِيَّاكُمْ بِتَقْوَى اللهِ فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ் கட்டளையிட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக!

அன்பிற்குரிய சகோதரர்களே!

கல்விமான் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் வரலாற்றை நினைவு கூர்வதின் மூலமாக இன்றைய குத்பா பிரசங்கத்தைத் துவங்க விரும்புகிறேன்.

ஒருமுறை, இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் அவர்களின் காலத்தில் இஸ்லாமிய ஆட்சியின் கலீஃபாவாக இருந்தவர், நாட்டு மக்களுக்கு வழிகாட்டுவதற்காக ஒரு புத்தகத்தைத் தயார் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். மிகவும் ஆழமாக சிந்தித்த பின் இமாம் அவர்கள் கலீஃபாவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்கள். அந்த நூலுக்கு ”அல்-முஅத்தா” எனப் பெயரிடவும் தீர்மானித்தார்கள். கலீஃபா அவர்கள் அந்த நூலை, திருக்குர்ஆனை அடுத்த இஸ்லாத்தின் சிறந்த மூலமாக ஆக்க விரும்புவதாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் அறிவித்தார். அப்போது இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள்: ஓரிறை நம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! : அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்துவேறுபாடுகளானது இந்த சமுதாயத்துக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து வழங்கப்படும் அருட்கொடையாகும். ஒவ்வொருவரும் அவருக்கு எது சரியாகவும் உண்மையாகவும் தென்படுகிறதோ அதனைப் பின்பற்றுபவராக உள்ளார். அறிஞர்கள், இமாம்கள் அனைவரும் நேர்வழி பெற்றவர்களாக உள்ளார்கள். அவர்கள் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடியே செயல்படுகிறார்கள்” என்றார்கள்.

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் பரிசுத்தமானவன். மேன்மையானவன்). மார்க்கம் சம்பந்தமான கருத்துவேறுபாடுகளைக் கையாளுவதில் மார்க்க அறிஞர்களாகிய உலமாக்களிடம் இந்த அளவுக்கு பணிவு காணப்பட்டது.

உலகின் அனைத்து சமுதாய மக்களும் இஸ்லாத்தை ஒரே வகையில் தான் பின்பற்ற வேண்டும் எனச் சட்டமாக்கப்பட்டிருந்தால், அதன் விளைவு என்னவாகும் என்பதை நாம் சிந்திப்பது அவசியமாகும்.

மார்க்கம் சம்பந்தமான விஷயங்களில் பலவிதமான கருத்துகள் கொண்டிருப்பது மனிதனின் இயல்பான விஷயமாகும். ஒருவர் மற்றவரின் கருத்தை ஏற்காமலிருக்கும் போக்கு இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே காணப்படுவதாகும். இறுதித் தீர்ப்பு நாள் வரை இந்நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கும். எனவே, இஸ்லாத்தின் ஏற்கத்தக்க எல்லைக்குள் நாம் இருக்கின்ற காலமெல்லாம் கருத்துவேறுபாடுகளின் விஷயத்தில் நாம் பொறுமையாகவும் திறந்த மனதுடன் சகிப்புத் தன்மையோடும் காணப்படுவது அவசியமாகும். அல்லாஹ், திருக்குர்ஆனின் ”ஹூத்” எனும் அத்தியாயத்தின் 118-119 வரையிலான வசனங்களில் கூறுகிறான்:

وَلَوْ شَآءَ رَبُّكَ لَجَعَلَ ٱلنَّاسَ أُمَّةً وَٰحِدَةً ۖ وَلَا يَزَالُونَ مُخْتَلِفِينَ ﴿١١٨﴾
إِلَّا مَن رَّحِمَ رَبُّكَ ۚ وَلِذَٰلِكَ خَلَقَهُمْ ۗ

பொருள்: உம்முடைய இறைவன் நாடினால் மனிதர்களை ஒரே சமுதாயத்தவராய் அவன் ஆக்கியிருப்பான். (அவன் அப்படி நாடாமையினால்) அவர்கள் கருத்துவேறுபாடு உள்ளவர்களாகவே இருந்து

வருவார்கள். (அவர்களில்) உம்முடைய இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர; இதற்காகவே அவர்களை அவன் படைத்திருக்கின்றான்.

எனது சகோதரர்களே!

கருத்துவேறுபாடுகள் கொள்வது உடன்பாடான நிலையை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். உறவுகளை முறிப்பதாகவோ, தொடர்படியான சண்டைகளுக்குக் காரணமாகவோ ஆகி விடக் கூடாது. மனிதர்கள் எனும் ரீதியில் கருத்துவேறுபாடு கொள்வது இயல்பான விஷயமாகும். அது மனித வாழ்க்கையின் அதிர்வுகளைப் பிரதிபலிக்கின்றது. நம்மால் மாற்று இன மக்களோடும் மாற்று மத சகோதரர்களோடும் நல்ல முறையில் நடந்து கொள்ள முடிகின்றது. ஆனால், முஸ்லிம்களான நாம், நமக்குள் வித்தியாசமான கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டிருப்பதன் காரணமாக, கல் நெஞ்சத்தோடும், ஒருவர் மற்றவருக்கு எதிராக அவதூறு கூறுபவர்களாகவும் இருக்கின்றோம் என்றால் அது துரதிருஷ்டமான விஷயமாகும்.

ஃபிக்ஹ் எனப்படும் இஸ்லாமிய சட்ட விளக்கம் சம்பந்தமான விஷயங்களில் கருத்துவேறுபாடு காணப்படுவதானது, அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமது சமுதாயத்துக்கு வழங்கப்படும் அருளாக உள்ளது. ஒவ்வொரு சட்டமும் வாழும் இடம், நேரம், கலாச்சாரம், சமுதாயத்தின் மீது அக்கலாச்சாரம் ஏற்படுத்தும் தாக்கம் போன்ற பல அம்சங்களை கவனத்தில் கொள்ளப்பட்டு உருவாக்கப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட இடம், காலம் மற்றும் மக்களுக்குப் பொருந்தும் ஒரு சட்டம் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக, செயல்படுத்த முடிவதாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

எனவே, மற்றவர்களின் கருத்துகளுக்கு, குறிப்பாக, நமது செயல்பாடுகள், பழக்க வழக்கங்களுக்கு மாற்றமாக உள்ள மற்றவர்களின் கருத்துகளுக்கு உடனே கண்டனம் தெரிவிப்பதோ அவற்றைக் கேலி செய்வதோ, ஏளனமாகக் கருதுவதோ கூடாது. மாறாக, ஒருவர் மற்றவரின் கருத்தை மதிப்பது அவசியமாகும். இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்களும் இஸ்லாமிய அறிஞர்களும் கூட ஃபிக்ஹ் சம்பந்தமான விஷயங்களில் கருத்துவேறுபாடு கொண்டார்கள். எனினும், ஒருவர் மற்றவரின் கருத்துக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்தார்கள்.

ஒருமுறை, அல்லாஹிப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள், ஒரு தோழர் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதைக் கேட்டார்கள். அவரது ஓதுதல், இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் ஓதிய முறைக்கு மாற்றமாக இருப்பதை அறிந்தார்கள். உடனே, அந்த தோழரை அழைத்துக் கொண்டு இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து, இவரது ஓதும் முறை உங்களின் ஓதும் முறைக்கு மாற்றமாக உள்ளது எனக் கூற, இறைத்தூதர்(ஸல்) அவர்களோ:

كِلاكُما مُحسِن

பொருள்: "உங்கள் இருவரின் ஓதும் முறைகள் சரி தான்" எனக் கூறினார்கள். (ஹதீதை பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

இவ்வாறு தான், அனுமதிக்கப்பட்ட வகையில் கருத்துவேறுபாடு கொண்டுள்ள மக்களுக்கிடையே இறைத்தூதர்(ஸல்) அவர்கள் விவேகத்துடன் நடந்து கொண்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தமது சொந்த கருத்துக்களுக்கான ஆதாரங்களைப் பெற்றிருந்தார்கள். அந்த ஆதாரங்கள் இஸ்லாமிய அடிப்படை அம்சங்களுக்கு மாற்றமாக இல்லாமலிருந்தன.

இமாம் குர்துபி (ரஹ்) அவர்கள் தனது ”அல்-ஜாமிஃ லிஅஹ்காமில் குர்ஆன்” எனும் நூலில் கருத்து வேறுபாடு கொண்டிருந்த மற்ற சில அறிஞர்களின் வரலாற்றைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

”இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களும் அவர்களைப் பின்பற்றி வந்தவர்களும், இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களும் மதீனாவின் இமாம்களுக்குப் பின்னால் நின்று தொழுதார்கள். அப்போது இமாம் மாலிக் (ரஹ்) அவர்களைப் பின்பற்றி தொழுபவர்களைப் போன்று, ”அல்-ஃபாத்திஹா” அத்தியாயத்தை ஓதுவதற்கு முன்பாக பஸ்மலாவை (பிஸ்மில்லாஹ்) சப்தமாகவும் ஓதவில்லை. மிகவும் குறைந்த சப்தத்துடனும் ஓதவில்லை”

மேற்கண்ட வரலாற்றில் நாம் சிந்தனை செய்வது அவசியமாகும்.

மரியாதைக்குரிய சகோதரர்களே!

குறுகிய மனப்பான்மை, ஒருவர் மற்றவருக்கு எதிரான கசப்பான உணர்வுகள் ஆகியவற்றை நாம் தவிர்ப்பது அவசியமாகும். காரணம், இவையெல்லாம் நமது ”நஃப்ஸ்” எனப்படும் ஆன்மாக்களின் தவறான

விருப்பங்களாகும். நாம் கருத்துவேறுபாடுகளை உடன்பாடான வகையில் கண்டால் "ரஹ்மத்" (அல்லாஹ்வின் அருள்) நமக்குக் கிடைக்கும். நமது மார்க்கத்தை மிகவும் எளிதாகச் செயல்படுத்தலாம். இதற்கு மாற்றமாக, கருத்துவேறுபாடுகளை பிரிவினைவாதமாகக் கண்டால் அது ஒற்றுமை யின்மைக்கும் காழ்ப்புணர்ச்சிக்கும் காரணமாகி விடும். இமாம் அச்சுயூத்தி (ரஹ்) அவர்கள் தனது "அல்-முவாஃபகாத்" எனும் நூலில் நமக்கு பின்வருமாறு உபதேசம் செய்கிறார்கள்:

"இஸ்லாம் சம்பந்தமாக நடைபெறும் எந்த ஒரு விஷயமாக இருக்கட்டும்; அதன் காரணமாக, மக்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு, அக்கருத்துவேறுபாடுகளின் காரணமாக, சண்டை சச்சரவுகள், வெறுப்பு, உறவுகள் முறிதல் ஆகியவை ஏற்படவில்லையெனில், அதுதான் இஸ்லாத்தின் இயல்பான நிலை என நாம் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் சம்பந்தமாக நடைபெறும் எந்த நிகழ்வுகளின் காரணமாக சண்டை சச்சரவுகள், ஒற்றுமையின்மை, அவதூறு கூறுதல், உறவு முறிவுகள் ஏற்படுகின்றனவோ அவற்றுக்கும் இஸ்லாத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்"

நாம் எப்போதும் சிறந்த, மிகவும் உடன்பாடான தீர்வு காண்பதில் கவனம் செலுத்த வேண்டும். இது போன்ற விஷயங்களுக்காக நமக்குள் சண்டை போட்டுக் கொள்வதில் எவ்வித பலனும் இல்லை. நாம் மிகச் சிறந்த நன்மையை அடைவதற்காக, நம்மைப் பிரித்து விடும் கருத்துவேறுபாடுகளை ஒதுக்கி வைப்போமாக! அந்த நன்மை தான், முஸ்லிம்களாகிய நமக்குள் அன்பு மற்றும் கருணைச் சிந்தனையை வெளிப்படுத்திக் கொள்வதாகும். நாம் எதிர்கொள்ளும் எல்லா எதிரான

கருத்துக்களையும் எதிர்க்க வேண்டும் என்பது அவசியமில்லை. இதற்கு மாறாக, அவற்றின் மூலம் நாம் பல பாடங்களைப் பெறலாம். அவற்றுக்கான சூழ்நிலைகள் ஏற்படும் போது அவற்றைச் செயல்படுத்தவும் முயற்சிக்கலாம்.

கருத்துவேறுபாடுகளை அதிகம் ஏற்கும் வகையில் நமது உள்ளங்களைத் திறக்க வேண்டுமென எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறோம். அன்பு மற்றும் கிருபை காட்டிக் கொள்ளும் சகோதரர்களாக நம்மை ஒங்கிணைக்குமாறும் வேண்டிக் கொள்கிறோம். அல்லாஹ்வின் மார்க்கத்தை அறிவதில் ஆர்வத்தையும் தீர்மானமான நிலையையும் நமக்கு அல்லாஹ் வழங்குவானாக! அப்போது நாம் அல்லாஹ்வின் மார்க்கத்தை சரியாகவும் நம்பிக்கையோடும் செயல்படுத்த முடியும். இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاَوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.